www.agaram.lk

AL/2017/58/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

04510

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

சுட்டெண் : ……………………………

| பகுதி I | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி I இலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
* பகுதி II இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

* **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**1.** "நாடகம் வாழ்க்கையின் பிரதிபலிப்பாகும். பழக்கவழக்கங்களைக் காட்டும் நிலைக் கண்ணாடியாகும்" எனக் குறிப்பிட்டவர்
(1) அரிஸ்டோட்டில் (2) பரதமுனிவர் (3) பேர்னாட்ஷா
(4) எமிலி சோலா (5) அலடைஸ் நிக்கொல் (……)

**2.** நாடகத்தின் பார்வையாளர் தொடர்பான **பொருத்தமற்ற** கூற்று
(1) ஆற்றுகையின் நேரடிப் பங்குபற்றுதலுக்கு முக்கியமானவர்கள்.
(2) நாடகத்தின் இருப்பு பார்வையாளரின் துலங்கல்களிலேயே தங்கியுள்ளது.
(3) நாடகத்தின் இரசிகரும் மத்தியஸ்தரும் விமர்சகரும் ஆவர்.
(4) பார்வையாளரின் கடமை நாடகத்தைப் பார்ப்பதாகும்.
(5) கூட்டுக் கலைஞர்களுள் பார்வையாளரும் உள்ளடங்குவர். (……)

**3.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - உடல் பாவத்தில் தங்கியிருக்கும் விதத்தில் அர்த்தம் வெளிப்படும்.
B - ஆங்கிக, சாத்வீக அபிநயம் வழியாக பாவம் வெளிப்படும்.
C - தூய நடனப் பண்பைக் கொண்டிருக்கும்.
D - பார்ப்போருக்கு தாளம், லயம், பாவம் மூலம் ரஸானுபவத்தைத் தோற்றுவிக்கும்.
E - லயம், அர்த்தம், மனோபாவம் ஆகியவற்றைத் தொடர்புபடுத்தும்.
மேற்குறித்த கூற்றுகளுள் நிருத்திய அசைவுடன் **தொடர்புபடாதது**
(1) A, B, C (2) A, B, D (3) A, B, E
(4) B, C, D (5) B, D, E (……)

**4.** அரங்கத்துடன் தொடர்புபட்ட பின்வரும் கலைஞர்களுள் நாடக எழுத்துருவைத் தெரிவுசெய்தல், நெறியாளரைத் தெரிவுசெய்தல், நடிகர்களை ஒழுங்குசெய்து கொடுத்தல் போன்ற பணிகளுடன் தொடர்புடையவர்
(1) வேடவுடை விதானிப்பாளர் (2) மேடை முகாமையாளர் (3) தயாரிப்பாளர்
(4) நெறியாளர் (5) காட்சி விதானிப்பாளர் (……)

**5.** அரங்கில் மேடைப் பொருள்களின் பயன்பாடுகளுள் பிரதானமானது
(1) நடிப்பையும் பாத்திர இயல்பையும் தெளிவுபடுத்தல் ஆகும்.
(2) அரங்கின் பின்னணியை விளங்கவைத்தல் ஆகும்.
(3) நாடகத்தின் கதையோட்டத்தை அறிமுகம் செய்தல் ஆகும்.
(4) நாடகத்தின் மனநிலையைப் புலப்படுத்துதல் ஆகும்.
(5) நாடகத்தின் மோடியைத் தெளிவுபடுத்த உதவுதல் ஆகும். (……)

**6.** அரங்கவெளி தொடர்பில் **பொருத்தமற்ற** கூற்று
(1) ஆற்றுவோரும் பார்ப்போரும் சந்திக்கின்ற இடமாகும்.
(2) மேடையைக் கொண்டிருக்க வேண்டும்.
(3) ஒட்டுமொத்த அரங்க அனுபவத்தினைத் தருவதாகும்.
(4) ஆற்றுகைக்கு வசதி செய்வதாகும்.
(5) ஆற்றுவோர்-பார்வையாளர் ஊடாட்டத்தில் செல்வாக்குச் செலுத்துவதாகும். (……)

[பக். 2 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



**7.** பரதர் கூறும் சாத்வீக அனுபவத்தின் எட்டுவித பாவங்களுள் ஸ்வரபங்க குறித்து நிற்பது,
(1) உடல் நிலையாக நிற்றலை ஆகும். (2) கண்ணீர் சொரிதலை ஆகும்.
(3) உடலில் நிறம் மாறுதலை ஆகும். (4) குரல் மாற்றத்தை ஆகும்.
(5) மயிர்கூச்செறிதலை ஆகும். (……)

**8.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - பாத்திரங்களின் இயல்பான நடத்தையைக் காட்டுவது.
B - தாள லயத்தின் மூலம் சம்பவங்களைப் புலப்படுத்துவது.
C - லலித அங்க அசைவுகள் அற்றது.
D - உலக மக்களின் இருப்பைக் காட்டுவது.
E - உலக இயல்பை மெருகூட்டிக் காட்டுவது.
மேற்குறித்தவற்றுள் லோகதர்மி பற்றிய கூற்றுகள் யாவை ?
(1) A, B, C (2) A, C, D (3) A, D, E
(4) B, C, E (5) C, D, E (……)

**9.** நாடக பாடம் ஒன்றில் மேடைக் குறிப்புகள் பற்றிய **பொருத்தமற்ற** கூற்று
(1) நடிப்பை இலகுவாக வெளிக்கொணர்வதற்குப் பயன்படும்.
(2) சூழமைவுகளைச் சிருஷ்டிப்பதற்கு உதவும்.
(3) நடிகரின் கற்பனையைத் தடைசெய்யாது.
(4) நெறியாள்கையைக் கட்டுப்படுத்த உதவும்.
(5) பாத்திர அசைவுகளை வரையறை செய்வதற்கு உதவும். (……)

**10.** நடிப்பிற்கு மிகவும் அடிப்படையானவை,
(1) அழகு, குரல்வளம், கட்டுறுதியான உடல் ஆகியனவாகும்.
(2) பயிற்சி, திறன், அழகு ஆகியனவாகும்.
(3) குரல்வளம், உள்ளார்ந்த ஆற்றல், அழகு ஆகியனவாகும்.
(4) உள்ளார்ந்த ஆற்றல், மனவுறுதி, அர்ப்பணிப்பு ஆகியனவாகும்.
(5) பயமின்மை, குரல்வளம், கவர்ச்சி ஆகியனவாகும். (……)

**11.** கதாநாயகன் தனது குறிக்கோளை அடையும் பயணத்தில் எதிர்கொள்ளும் தடைகள் சமஸ்கிருத நாடகக் கதைப்பின்னல் மரபில் எவ்வாறு அழைக்கப்படும் ?
(1) பிரகரி (2) பிந்து (3) பதாக
(4) பிஜ (5) கார்ய (……)

**12.** நாடகத்தின் லயம் குறித்து நிற்பது,
(1) நடிகர்களின் செயலியக்கத்தையாகும்.
(2) இசை, ஒலிசார் விளைவுகளையாகும்.
(3) காட்சிகளின் இணைப்பாக்கத்தையாகும்.
(4) கள வரையறையையும் ஒளி விளைவுகளையுமாகும்.
(5) கட்புல, செவிப்புல அசைவியக்க மூலகங்களின் பூரண விளைவையாகும். (……)

**13.** பின்வருவனவற்றுள் நடனக்கோலம் (choreography) என்பதனை மிகச் சரியாக விபரிக்கும் கூற்று யாது ?
(1) நடன விதிகளைப் பிரயோகிப்பதாகும்.
(2) நடன மூலகங்களைச் சந்தர்ப்பத்திற்கேற்ப பயன்படுத்துவதாகும்.
(3) குறித்த சூழமைவைத் தெளிவுபடுத்துவதாகும்.
(4) தொடர்ச்சியான அசைவுகளையும் வடிவங்களையும் கட்புலப் படிமமாக இணைப்பாக்கம் செய்வதாகும்.
(5) உணர்ச்சி மோதுகைகளின் முரண் நிலைகளை வளர்த்தெடுப்பதாகும். (……)

**14.** அபத்த நாடகப் பண்பு **அல்லாதது**
(1) வகை மாதிரிப் பத்திரங்கள் காணப்படல் (2) காரண, காரியத் தொடர்பு
(3) அர்த்தமுள்ள மொழிப் பிரயோகம் (4) காரண, காரியத் தொடர்பின்மை
(5) மோடிமைப் பாங்கான நடிப்பு (……)

**15.** தொலைக்காட்சி நாடகத்தின் வெற்றி எதில் தங்கியுள்ளது ?
(1) அது அளிக்கும் காட்சியில் ஆகும்.
(2) அதன் வழிவரும் குரலில் ஆகும்.
(3) காட்சியையும் காலத்தையும் இணைப்பதில் ஆகும்.
(4) ஒலிப்பதிவில் ஆகும்.
(5) வெளிப்புறக் காட்சிகளில் ஆகும். (……)

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk



**16.** நாடகத்திற்கான இசையின் இயல்பு,
(1) பொருத்தமான இடங்களில் பாடல்களை அமைப்பதாகும்.
(2) நாடகத்தினூடே மேலெழும் உணர்ச்சிக்கு அழுத்தம் கொடுப்பதாகும்.
(3) பாடல்கள் இல்லாது வாத்திய இசையையே கொண்டிருப்பதாகும்.
(4) பார்வையாளருக்குப் பரிச்சயமான மெட்டுகளைக் கொண்டிருப்பதாகும்.
(5) நாடகத்தின் கதையோட்டத்திற்கேற்ப பின்னணியாக மட்டும் அமைந்து காணப்படுவதாகும். (……)

**17.** பாதல் சர்க்கார் குறிப்பிடும் மூன்றாவது அரங்கு என்பது,
(1) பாரம்பரிய அரங்காகும்.
(2) மேலைத்தேய அரங்காகும்.
(3) பாரம்பரிய அரங்கையும் மேலைத்தேய அரங்கையும் இணைத்த அரங்காகும்.
(4) எளிமை அரங்காகும்.
(5) செவ்வியல் அரங்காகும். (……)

**18.** விமர்சகர் ஒருவரிடம் இருக்க வேண்டிய முக்கிய பண்பு
(1) குறைகளை மாத்திரம் கூறுவது
(2) நிறைகளை மாத்திரம் கூறுவது
(3) நாடக அளிக்கைக்கு உதவுவது
(4) குறை, நிறைகளை எடுத்துக் கூறுவது
(5) பார்வையாளராக மாத்திரம் இருப்பது (……)

**19.** பட்டறை அரங்கு (Workshop Theatre) என்பது,
(1) நடிகருக்குப் பயிற்சியளிப்பதாகும்.
(2) நாடகப் பாடத்தைத் (Dramatic Text) தயாரிப்பதாகும்.
(3) அரங்க விளையாட்டை முதன்மைப்படுத்துவதாகும்.
(4) நாடக வரலாற்றை அறியவைப்பதாகும்.
(5) பட்டறையே அரங்காக அமைவதாகும். (……)

**20.** அரிஸ்டோட்டில் குறிப்பிடும் கதாசிஸ்,
(1) நடிப்பு முறைமைக்கானது.
(2) கதைப் பின்னலுக்கானது.
(3) பார்வையாளர் மீதான விளைவுக்கானது.
(4) காட்சியமைக்கும் முறைமைக்கானது.
(5) பாத்திரத்தைச் சிறப்பிப்பதற்கானது. (……)

**21.** 'நெபத்யஹ்ரக' என்பதனால் குறிப்பிடப்படுவது
(1) இசைக் குழுவினர் அமரும் இடம்
(2) நடிப்பிடம்
(3) பிரதான மேடை
(4) ஒப்பனை அறை
(5) பார்வையாளர் இடம் (……)

**22.** நாடக பாடம் தொடர்பான பின்வரும் கூற்றுகளுள் சரியானது
(1) ஆரம்பம், நடு, முடிவு என்பவற்றைக் கட்டாயம் கொண்டிருக்கும்.
(2) சொல்லாடல் மட்டும் இடம்பெற்றிருக்கும்.
(3) நாடகச் செயல் இயக்கத்தையும் பாத்திரங்களையும் கட்டாயம் கொண்டிருக்கும்.
(4) மேடைக் குறிப்புகளைக் கட்டாயம் கொண்டிருக்கும்.
(5) சமகால உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கும். (……)

**23.** கூத்தின் இறுதியில் இடம்பெறுவது
(1) வணக்கம் உரைத்தல்
(2) பாடி முடித்தல்
(3) வாழி பாடுதல்
(4) காப்புக் கூறுதல்
(5) ஆடிமுடித்தல் (……)

**24.** எழிற்கை என்பது
(1) ஏந்திய கை
(2) தாளமிடும் கை
(3) பாவங்களைக் காட்டாத கை
(4) பாவங்களைச் சித்திரிக்கும் கை
(5) ஆட்டச் செம்மையைப் பேணுவதற்கான கை (……)

**25.** "அரங்கில் நடிகர் ஒருவர் யோகியாகத் தொழிற்பட வேண்டும்" என வலியுறுத்தியவர்
(1) ஒகஸ்தாபோல்
(2) குறொட்டொவ்ஸ்கி
(3) றிச்சட் செக்னர்
(4) ஆட்டுவார்ட்
(5) பீற்றர் புறூக் (……)

**26.** பரதரது நாட்டியசாஸ்திர இலக்கணம் குறிப்பிடுவது,
(1) பரத நடனத்தை ஆகும்.
(2) கூத்தை ஆகும்.
(3) கர்நாடக இசையை ஆகும்.
(4) தென்னாசியக் கலையை ஆகும்.
(5) நாடகத்தை ஆகும். (……)

**27.** முறைமை நடிப்பின் முக்கிய அம்சம்
(1) பாத்திரமாக வாழ்தல்
(2) அந்நியப்படுதல்
(3) கதைகூறல்
(4) அளிக்கை செய்தல்
(5) செய்துகாட்டுதல் (……)



Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



04510

**28.** இந்திய மரபில் மார்க்க குறிப்பது,
(1) அடிநிலை மக்களின் நாடக வகைகளையாகும்.
(2) உயர் நாடக வடிவங்களையாகும்.
(3) வட இந்திய நாடக வடிவங்களையாகும்.
(4) தென்னிந்திய நாடக வடிவங்களையாகும்.
(5) கிராமிய நாடக வடிவங்களையாகும். (……)

**29.** யப்பானிய நோ அரங்கு ஒன்றின் அழகியல் திருப்தி எவ்வாறு அழைக்கப்படும் ?
(1) கதாசிஸ் (2) ரஸம் (3) சுவை
(4) யூஜின் (5) சமனிலை (……)

**30.** சேக்ஸ்பியரது நாடகங்களின் பிரதான மூலகமாகப் பயன்படுவது
(1) பெருங்காட்சி (2) வார்த்தை (3) உரையாடல்
(4) இசை (5) அசைவு (……)

**31.** கிரேக்கத்தில் மிமெசிஸ் (Mimesis) எனப்படுவது,
(1) அவலத்தவறு ஆகும். (2) பழி விளைவு ஆகும். (3) தெளிந்த சிந்தை ஆகும்.
(4) விதி, சாபம் ஆகியனவாகும். (5) போலச்செய்தல் ஆகும். (……)

**32.** நாடகத் தயாரிப்பாளர் என்பவர்,
(1) நடிகர்களுக்குப் பயிற்சியளிப்பவர்.
(2) எழுத்துருவை மேடையில் காட்சியாக்குபவர்.
(3) நிதி முகாமைத்துவத்தை மேற்கொள்பவர்.
(4) மேடை முகாமைத்துவத்தைக் கையாள்பவர்.
(5) காட்சிப் பொருட்களைத் தயாரிப்பவர். (……)

**33.** ஒரு நாடகத்தில் ஒப்பனை பயன்படுவது,
(1) நடிகரின் முகத்தை அழகாக வைத்திருப்பதற்காகும்.
(2) பாத்திரங்களின் உணர்ச்சியை முனைப்புறுத்திக் காட்டுவதற்காகும்.
(3) நன்றாகப் பேசி நடிக்க உதவுவதற்காகும்.
(4) பாத்திரத்தின் கவர்ச்சியை எடுத்துக்காட்டுவதற்காகும்.
(5) பாத்திரத்தின் வயதைக் காட்டுவதற்காகும். (……)

**34.** பார்வையாளரை 'சகிர்தயா' எனக் குறிப்பிடும் அரங்கு
(1) சமஸ்கிருத அரங்கு (2) மேலைத்தேய அரங்கு (3) யப்பானிய அரங்கு
(4) தெருக்கூத்து அரங்கு (5) சீன அரங்கு (……)


**35.** சேக்ஸ்பியர் பயன்படுத்தும் முட்டாள் பாத்திரம் எப்பொழுதும்,
(1) தேவையானவற்றைப் பேசும். (2) அர்த்தமற்றவற்றைப் பேசும்.
(3) அறிவுபூர்வமானவற்றைப் பேசும். (4) சிரிப்புக்கிடமானவற்றைப் பேசும்.
(5) விமர்சனபூர்வமானவற்றைப் பேசும். (……)

**36.** படத்தில் காட்டப்பட்டுள்ள சிங்கள நாடக நெறியாளர்
(1) சைமன் நவகத்தேகம
(2) தம்ம ஜாகொட
(3) ஹென்றி ஜயசேன
(4) சுகதபால டி சில்வா
(5) பராக்கிரம நிரியெல்ல



(……)

**37.** படத்திற் காட்டப்பட்டுள்ள அரங்கம் எந்த நாட்டிற்குரியது ?
(1) சீனா
(2) ஜப்பான்
(3) மலேசியா
(4) இந்தியா
(5) இலங்கை



(……)

[பக். 5 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**38.** படத்தில் காட்டப்பட்டுள்ள நடிகர்கள் எந்த அரங்கிற்குரியவர்கள் ?



(1) ஒடிசி
(2) மணிபுரி
(3) யக்ஷகானம்
(4) பயலாட்டா
(5) சாஓ

(……)

**39.** படத்தில் காட்டப்பட்டுள்ள முக ஒப்பனைகள் இடம்பெறும் அரங்குகளை ஒழுங்குமுறையில் காட்டும் விடை யாது ?






(1) கபுகி, சீன ஒபேறா, கதகளி
(2) சீன ஒபேறா, கதகளி, கபுகி
(3) கதகளி, சீன ஒபேறா, கபுகி
(4) கபுகி, கதகளி, சீன ஒபேறா
(5) சீன ஒபேறா, கபுகி, கதகளி

(……)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ள தமிழ் நாடக ஆளுமைகள் முறையே,


(1) டி. கே. சண்முகம், சங்கரதாஸ் சுவாமிகள், கலையரசு சொர்ணலிங்கம் ஆவர்.
(2) சங்கரதாஸ் சுவாமிகள், கலையரசு சொர்ணலிங்கம், டி. கே. சண்முகம் ஆவர்.
(3) கலையரசு சொர்ணலிங்கம், சங்கரதாஸ் சுவாமிகள், டி. கே. சண்முகம் ஆவர்.
(4) டி. கே. சண்முகம், கலையரசு சொர்ணலிங்கம், சங்கரதாஸ் சுவாமிகள் ஆவர்.
(5) கலையரசு சொர்ணலிங்கம், டி. கே. சண்முகம், சங்கரதாஸ் சுவாமிகள் ஆவர்.

(……)

* *

[பக். 6 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

அධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ பிரிவு **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பிரிவு **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### பிரிவு A

**1.** (i) 'நாடகம்' என்ற எண்ணக்கருவை விளக்குக. (05 புள்ளிகள்)

(ii) மேடைக்காக நாடக பாடம் ஒன்றைத் தயாரிக்கும் ஒழுங்குமுறையை விவரிக்குக. (10 புள்ளிகள்)

**2.** (i) 'அலங்காரரூபன்' தென்மோடிக் கூத்தின் உச்சக்கட்டமாகக் (climax) கருதப்படுவது யாது ? (05 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் நீர் குறிப்பிட்ட உச்சக்கட்டத்தை நோக்கி அலங்காரரூபன் கூத்து வளர்ந்து செல்லும் விதத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

**3.** (i) 'அரங்கவெளி' என்பதனால் கருதப்படுவது யாது ? (05 புள்ளிகள்)

(ii) பின்வரும் அரங்குகளில் அரங்கவெளி பயன்படும் விதத்தினை விளக்குக.

(அ) காமன் கூத்து (05 புள்ளிகள்)

(ஆ) தெருவெளி அரங்கு (05 புள்ளிகள்)

### பிரிவு B

**4.** பின்வரும் அரங்குகளின் பார்வையாளரை இனங்கண்டு, அவர்களின் துலங்கல்களை விவரிக்குக.

(i) பாரம்பரிய அரங்கு

(ii) நவீன அரங்கு

(iii) சமகால அரசியல் அரங்கு (03 × 05 = 15 புள்ளிகள்)

**5.** (i) நீர் உமது சகபாடிகளுடன் சேர்ந்து உருவாக்கிய நாடகத் தயாரிப்பு முறைமையை உமது அனுபவத்தைக் கொண்டு விவரிக்குக. (05 புள்ளிகள்)

(ii) உமது ஆசிரியரின் நெறியாள்கையில் நீரும் பங்குகொண்டு உருவாக்கிய நாடகத் தயாரிப்பு முறைமையில் உமது அனுபவத்தை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iii) மேலே (i), (ii) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட அனுபவங்களுக்கிடையிலான வேறுபாட்டை ஒப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) சமயமும் அரங்கும்

(ii) அரங்கும் சினிமாவும்

(iii) கதாசிஸ் (Catharsis)

(iv) பங்குகொள்ளல் அரங்கு (Participatory theatre)

(v) பரீட்சார்த்த அரங்கு (Experimental theatre) (03 × 05 = 15 புள்ளிகள்)

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

**58 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

சுட்டெண் : ...............................

| பகுதி I | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், பகுதி **II** இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

※ பகுதி **II** இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

※ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

※ **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**1.** புறசீனியம் அரங்கும் இயல்புருக் காட்சியமைப்புகளும் மேலைத்தேயத்தில் அறிமுகமாகியது,
(1) ரோம அரங்கில் ஆகும்.
(2) நவதொல்சீர்வாத அரங்கில் ஆகும்.
(3) இத்தாலிய மறுமலர்ச்சிக்கால அரங்கில் ஆகும்.
(4) யதார்த்த இயற்பண்புவாத அரங்கில் ஆகும்.
(5) எலிசபெத்கால அரங்கில் ஆகும். (......)

**2.** ஒளியின் வர்ணச் சக்கரம் ஒன்றின் மூலவர்ணங்கள்
(1) சிவப்பு, நீலம், பச்சை (2) மஞ்சள், நீலம், ஊதா (3) சிவப்பு, நீலம், மஞ்சள்
(4) மஞ்சள், நீலம், செம்மஞ்சள் (5) மஞ்சள், ஊதா, பச்சை (......)

**3.** அரங்கின் காண்பிய மூலகங்களுள் **அடங்காதது**
(1) நடிகர் (2) வேடவுடை (3) மேடைப்பொருட்கள்
(4) ஒலி (5) ஒளியமைப்பு (......)

**4.** 16ஆம் நூற்றாண்டில் இத்தாலியிலும் பிரான்சிலும் தோன்றி உலகெங்கும் வியாபித்த தொல்சீர் நடனம்
(1) ஜாஸ் நடனம் (2) ரப் நடனம் (3) இசைப்பா நடனம்
(4) நவீன நடனம் (5) பலே நடனம் (......)

**5.** நூர்த்தி நாடக மரபு,
(1) இசையில் தேர்ந்த நடிகரை வேண்டி நிற்பது.
(2) மத்தியதர வர்க்கப் பார்வையாளருக்கானது.
(3) மேற்கின் தொடர்பால் பெறப்பட்டது.
(4) சிங்கள, தமிழ் உறவை வளர்ப்பது.
(5) வீரசாகசங்களை உள்ளடக்கியது. (......)

**6.** இலங்கையில் பொட்டல் வெளியில் ஆடப்படும் கூத்து
(1) காத்தான் கூத்து (2) காமன் கூத்து (3) அருச்சுனன் தபசு
(4) நாட்டைக் கூத்து (5) வசந்தன் கூத்து (......)

**7.** ஹென்றிக் இப்சனின் 'ஒரு பாவையின் வீடு' நாடகத்தில் வரும் இரண்டு பாத்திரங்கள்
(1) நோறா, றொக்கா (2) குறொக்ஸ்ரட், மேரி லின்டே (3) நோறா, ஒல்வின்
(4) ஹெல்மர், வைத்தியர் றாங் (5) றொக்கா, ஒல்வின் (......)

**8.** மேல்வருவோருள் நடிப்பால் தம் பாத்திரங்களுக்கு உயிரூட்டியவர் **அல்லாதவர்**
(1) மார்லன் பிராண்டோ (2) சேர் லோரன்ஸ் ஒலிவியர் (3) வி. வி. வைரமுத்து
(4) பிரான்சிஸ் ஜெனம் (5) அன்ரன் செக்கோவ் (......)

[பக். 2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**9.** மேல்வரும் விடயங்களைக் கருதுக.

A - இலங்கையின் தென் மாகாணத்தில் தனிச் சிறப்புடைய வடிவமாக உள்ளது.
B - பெண்களுக்காக நடத்தப்படும் சடங்குகளில் ஒன்றாகும்.
C - 'ரித்திப்' பிசாசின் துஷ்டப் பார்வையைப் போக்கும் நம்பிக்கையில் நிகழ்த்தப் பெறுகின்றது.
D - 'கேட்ட ரட்டயக்கும' என்ற சாந்திச் சடங்கு தொடர்பான நூலை ஜயசேனா எழுதியுள்ளார்.
E - உளமறிச் சிகிச்சை அரங்காக இது உள்ளது.

இவற்றுள் ரித்தியாகய/ரட்டயக்கும சாந்திச் சடங்கு தொடர்பான சரியான கூற்றுகள் யாவை ?

(1) A, B, C, D (2) A, B, C, E (3) A, B, D, E
(4) A, C, D, E (5) B, C, D, E (......)

**10.** வெவ்வேறு நோய்களைக் குறிக்கும் வேட முகங்களை அணிந்து ஆடப்படும் சிங்களச் சடங்கு

(1) கொஹும்பகங்காரிய (2) தொவொல்மடுவ (3) சன்னியக்கும
(4) கம்மடுவ (5) பஹன்மடுவ (......)

**11.** கண்ணன் கம்சனை வென்ற கதையை வெளிப்படுத்தும் சடங்கு

(1) யமசங்காரம் (2) கஜமுகாசுரன் போர் (3) சூரன் போர்
(4) கம்சன் போர் (5) பாண்டரங்கம் (......)

**12.** குறவஞ்சி நாடகத்தில் வரும் சிங்கன், சிங்கி பாத்திரங்களின் இயல்புகளை ஒத்ததாக காமன்கூத்தில் வரும் பாத்திரங்கள்

(1) மன்மதன், ரதி (2) சிவன், ரதி
(3) வெட்டியான், வெட்டிச்சி (4) நந்திதேவர், வெட்டிச்சி
(5) விசித்திர புத்தர், ரதி (......)

**13.** கண்ணகி, மாரி, திரௌபதை அம்மன் வழிபாடுகளோடு தொடர்புடைய சடங்குகள்

(1) வேட்டைத் திருவிழா, மானம்பூ (2) குளுத்தி, பாண்டவர் வனவாசம்
(3) குளுத்தி, மானம்பூ (4) பாண்டவர் வனவாசம், மானம்பூ
(5) வேட்டைத் திருவிழா, குளுத்தி (......)

**14.** பாத்திரங்களை அறிமுகம் செய்து, அவர்களை மேடைக்கு அழைத்து, குருநான்சே அவர்களுக்குரிய பாடல்களைப் பாடும் முறைமையைக் கொண்ட நாடகம்

(1) கோலம் (2) மகுடி (3) சொக்கரி
(4) நாடகம (5) நூர்த்தி (......)

**15.** சோபோகிளிசின் அன்ரிகனி நாடகத்தின் உள்ளடக்கம் எதனை அடிப்படையாகக் கொண்டது ?

(1) வரலாற்று நிகழ்வை (2) கற்பனையை (3) மதங்களை
(4) தொன்மங்களை (5) சமகாலத்தை (......)

**16.** பேராசிரியர் சரத்சந்திரவின் மனமே, சிங்கபாகு ஆகிய நாடகங்கள்

(1) நூர்த்தி நாடக மரபைச் சார்ந்தவை. (2) நாடகம மரபைச் சார்ந்தவை.
(3) சடங்கு மரபைச் சாரந்தவை. (4) கூத்து மரபைச் சார்ந்தவை.
(5) நவீன மரபைச் சார்ந்தவை. (......)

**17.** உடக்குப் பாஸ்கா ஆடப்பட்டு வரும் பிரதேசம்

(1) குருநகர் (2) இளவாலை (3) பேசாலை
(4) பாசையூர் (5) மாதகல் (......)

**18.** மேல்வருவனவற்றுள் வடமோடிக் கூத்தில் **உள்ளடங்காதது**

(1) பதினெட்டாம் போர் (2) தர்மபுத்திரன் (3) அனுருத்திர நாடகம்
(4) கர்ணன் போர் (5) இராம நாடகம் (......)

**19.** நாடகத்தில் 'பின்னோக்கு இசை' என்பதனால் கருதப்படுவது

(1) பின்புலச் சூழலைத் தெளிவுபடுத்தல்
(2) நாடகத்தின் மனநிலையை அறியவைத்தல்
(3) நாடகத்தின் மோடியை வரையறுத்தல்
(4) நாடகத்தின் முன், பின்னான சம்பவங்களைக் கோர்த்தல்
(5) நாடகத்தின் கதையை விளங்கவைத்தல் (......)

**20.** திரை தொடர்பான மேல்வரும் விடயங்களுள், யதார்த்த மோடி நாடகங்களுக்கு அடிப்படையானது,

(1) நாடகமோடிக்கு ஏற்ப திரைகளின் பயன்பாடு வேறுபடுதலாகும்.
(2) பார்வையாளரையும் மேடையையும் பிரிப்பதற்கு முன்திரை பயன்படுதலாகும்.
(3) காட்சி மாற்றத்திற்கும் ஒளியூட்டலுக்கும் 'சைக்கிளோறாமா' எனும் பின்திரை பயன்படுதலாகும்.
(4) நடிகர்களின் நடிப்பு வெளிப்பாட்டைத் திரை பாதித்தலாகும்.
(5) அரங்க மருட்கையைத் தோற்றுவிப்பதற்கு உதவுதலாகும். (......)

[பக். 3 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



**21.** நாடகம் முழுவதும் அரங்கில் கட்டியக்காரன் பங்கு வகிப்பது
(1) வடபாங்கில் ஆகும். (2) தென்பாங்கில் ஆகும். (3) வடமோடிக் கூத்தில் ஆகும்.
(4) தென்மோடிக் கூத்தில் ஆகும். (5) காத்தான் கூத்தில் ஆகும். (......)

**22.** பொதிப் பொருள்களை அருள்நிலையில் தெரிவுசெய்வதன் மூலம் பாத்திரத் தெரிவு இடம்பெறும் கூத்து
(1) நாட்டைக் கூத்து (2) கோவலன் கூத்து (3) பொன்னர் சங்கரர்
(4) காமன் கூத்து (5) வசந்தன் கூத்து (......)

**23.** கலையரசு சொர்ணலிங்கத்தின் நாடகங்களின் காட்சியமைப்புகள்
(1) குறியீட்டுப் பாங்கிலானவை. (2) யதார்த்தப் பாங்கிலானவை.
(3) பெருங்காட்சிப் பாங்கிலானவை. (4) பரோக் பாங்கிலானவை.
(5) குறியீட்டுப் பாங்கும் யதார்த்தப் பாங்கும் கலந்தவை. (......)

**24.** க. கணபதிபிள்ளையின் தமிழ் அரசியல் நாடக வளர்ச்சியை எடுத்துக்காட்டும் நாடகங்கள்
(1) பொருளோ பொருள், துரோகிகள், சங்கிலி
(2) தவறான எண்ணம், துரோகிகள், சங்கிலி
(3) மாணிக்கமாலை, உடையார் மிடுக்கு, சுந்தரம் எங்கே
(4) தவறான எண்ணம், கண்ணன் கூத்து, உடையார் மிடுக்கு
(5) முருகன் திருகுதாளம், தவறான எண்ணம், சங்கிலி (......)

**25.** இ. சிவானந்தனின் 'இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் நாடக அரங்கம்' எனும் நூலில் குறிப்பிடப்படும் பல்கலைக்கழகங்கள்
(1) பேராதனை, கட்டுபெத்த, கொழும்புப் பல்கலைக்கழகங்கள்
(2) பேராதனை, யாழ்ப்பாணம், கிழக்குப் பல்கலைக்கழகங்கள்
(3) கட்டுபெத்த, கிழக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்கள்
(4) கொழும்பு, கட்டுபெத்த, கிழக்குப் பல்கலைக்கழகங்கள்
(5) பேராதனை, கட்டுபெத்த, கிழக்குப் பல்கலைக்கழகங்கள் (......)

**26.** மேல்வருவனவற்றுள் சேக்ஸ்பியரின் ஜூலியஸ் சீசர் நாடகம் தொடர்பில் **பொருத்தமற்ற** கூற்று
(1) சீஸருக்கும் புறூட்டசுக்கும் இடையிலான தொடர்பை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தும்.
(2) எலிசபெத்கால அவலச்சுவை நாடகங்களுள் ஒன்றாகும்.
(3) யாதார்த்த அரங்கிற்கு முன்னோடியாக அமைந்ததாகும்.
(4) 'கிரேக்க உரோமப் பிரபுக்களின் வாழ்க்கை வரலாறு' எனும் நூலைத் தழுவி அமைந்தது.
(5) சீஸரின் கொலையையும் மார்க் அன்டனியின் உரையையும் முதன்மையான காண்பியமாகக் கொண்டிருப்பது. (......)

**27.** சிங்கனும் நூவனும் சந்திப்பு இடம்பெறும் நாடகம்
(1) முக்கூடற் பள்ளு (2) திருக்குற்றாலக் குறவஞ்சி
(3) பறாளை விநாயகர் பள்ளு (4) நல்லைக் குறவஞ்சி
(5) நந்தனார் சரித்திரக் கீர்த்தனை (......)

**28.** அபிக்ஞான சாகுந்தலத்தின் கட்டமைப்பில் துருவாச முனிவரது சாபம் உணர்த்துவது,
(1) எதிர்பார்ப்பை ஆகும். (2) முற்கோடிகாட்டலை ஆகும். (3) திருப்புமுனையை ஆகும்.
(4) குறிப்பீட்டை ஆகும். (5) உச்சநிலையை ஆகும். (......)

**29.** திருமறைக் கலாமன்றத்தின் நாடகம்சார் சஞ்சிகை
(1) அரங்கம் (2) கூத்தரங்கம் (3) ஆற்றுகை
(4) கலைச் சுவடுகள் (5) மெய்ப்பாடு (......)

**30.** கீர்த்தனை நாடகங்களின் இசையில் பெரும் பங்கு வகிக்கும் இசை
(1) நாட்டார் இசை (2) கர்நாடக இசை (3) பண்ணிசை
(4) மெல்லிசை (5) ஹிந்துஸ்தானி இசை (......)

**31.** மறைஞான நாடகங்கள் எனப்படுபவை,
(1) கிறிஸ்தவ மக்களின் ஒழுக்கப் பண்புகளைக் குறிப்பனவாகும்.
(2) இயேசுவின் பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு என்பவற்றைக் குறிப்பனவாகும்.
(3) புனிதர்களின் அற்புதங்களை உள்ளடக்கிய கதைகளைக் கூறுவனவாகும்.
(4) வணக்க முறையோடு தொடர்புடைய கதைகளைக் கூறுவனவாகும்.
(5) கிறிஸ்துவின் பாடுகளை விவரிப்பனவாகும். (......)

**32.** சமஸ்கிருத நாடக மரபில் நெறியாளரை எவ்வாறு குறிப்பிடுவர் ?
(1) ஜோக்கர் (2) பபூன் (3) விதூஷகன்
(4) சூத்திரதாரி (5) வழிப்படுத்துனர் (......)

**33.** சி. என். அண்ணாத்துரை எழுதிய நாடகம்
(1) தூக்கு மேடை (2) சந்திரோதயம் (3) உதயசூரியன்
(4) மௌனக்குறம் (5) வாக்கும் வக்கும் (......)

**34.** சோபோகிளிசின் திறஜெடி நாடகம் **அல்லாதது**
(1) ஹெலன் (2) ஈடிப்பஸ் மன்னன் (3) அன்டிகனி
(4) இலெக்ரா (5) அஜக்ஸ் (......)

[பக். 4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
இங்கே வெட்டி அகற்றவும்
agaram.lk

www.agaram.lk



**35.** 'புன்றக்கு' எனப்படும் பொம்மலாட்ட அரங்க வகை எந்த அரங்குக்குரியது ?
(1) சீன அரங்கு
(2) யப்பானிய அரங்கு
(3) இந்திய அரங்கு
(4) தேசி அரங்கு
(5) இந்தோனேசிய அரங்கு (......)

**36.** படத்தில் சிலை வடிவில் காட்டப்பட்டுள்ளவர்
(1) செல்லையா அண்ணாவியார்
(2) நாகமணிப்போடி அண்ணாவியார்
(3) பாலகப்போடி அண்ணாவியார்
(4) ஆறுமுகம் அண்ணாவியார்
(5) பத்மநாதன் அண்ணாவியார்




(......)

**37.** படத்தில் காட்டப்பட்டுள்ள ஐரோப்பிய நாடகவியலாளர்
(1) றிச்சட் செக்னர்
(2) பீற்றர் புறூக்
(3) ஒகஸ்தாபோல்
(4) பேட்டல் பிரெ்ட்
(5) மேயர் ஹோல்ட்



(......)

**38.** படத்தில் காட்டப்பட்டுள்ள சிங்கள நாடக நெறியாளர்
(1) தர்மஸ்ரீ பண்டாரநாயக்க
(2) தயானந்த குணவர்தன
(3) ஜெயலத் மனோரத்ன
(4) குணசேன கலப்பத்தி
(5) ஹென்றி ஜெயசேன



(......)

**39.** படத்தில் காட்டப்பட்டுள்ளது,
(1) காமன் கூத்துச் சடங்கு ஆகும்.
(2) வீரபத்திரன் ஆட்டச் சடங்கு ஆகும்.
(3) வேடுவர் ஆட்டம் ஆகும்.
(4) காட்டேரி அம்மன் சடங்கு ஆகும்.
(5) கறுப்பர் நடனம் ஆகும்.



(......)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ள வாத்தியத்தின் பெயர்
(1) முகவீணை
(2) ஊதுகுழல்
(3) ஹொரணை
(4) சொர்ணாளி
(5) மகுடி



(......)

* *

[பக். 5 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

4510

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ பிரிவு **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பிரிவு **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### பிரிவு A

**1.** மேல்வரும் நாடகங்களில் வரும் பிரதான மோதுகையையும் பிரதான பாத்திரமொன்றின் சித்திரிப்பையும் விவரிக்குக.
(i) அன்ரிகனி
(ii) யூலியஸ்சீசர்
(iii) ஒரு பாவையின் வீடு (3 x 5 = 15 புள்ளிகள்)

**2.** ஐரோப்பிய நவீன அரங்கில் மருட்கையை ஏற்படுத்தக் கையாளப்படும் உத்திகள் **மூன்றினை** விளக்குக. (15 புள்ளிகள்)

**3.** இலங்கை நவீன அரங்கு வளர்ச்சியில் சிங்கள நாடகத்துறைக்குப் பங்களிப்புச் செய்த **மூன்று** நாடகவியலாளர்களின் அரங்கச் செயற்பாடுகள் பற்றி விவரிக்குக. (15 புள்ளிகள்)

### பிரிவு B

**4.** (i) இலங்கை கூத்துமரபின் மீட்பு முயற்சிகளின் முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)
(ii) பாரம்பரியக் கூத்தரங்கிலும் கூத்தின் புத்தாக்க அரங்கிலும் மேற்கொள்ளப்படுகின்ற பயிற்சி முறைகளை ஒப்பிட்டு விளக்குக. (10 புள்ளிகள்)

**5.** ஈழத்துத் தமிழ் அரங்கப் போக்கில் 1980 களுக்குப் பின்னரான அரங்கு வித்தியாசமான போக்கில் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இக்கூற்றினை,
(i) அக்காலக்கட்டச் சமூகச் சூழல்
(ii) அரங்குகளின் உள்ளடக்கம்
(iii) அவ்வரங்குகளின் நெறியாள்கை முறைமைகள்
என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (15 புள்ளிகள்)

**6.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.
(i) காளிதாசர்
(ii) பேட்டோல் பிரெ்ட்
(iii) ஸ்ரனிஸ்லாவ்ஸ்கி
(iv) ஜப்பானிய அரங்கமரபில் கியோஜின்
(v) கொமடியா டெல் ஆர்ட்டே (Commedia Dell Arte) (3 x 5 = 15 புள்ளிகள்)

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk